REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 41 சுசெய்தி: தை 13உ சனி (26—1—57) ★ ★ வெளியீடு: தை 14உ ஞாயிறு (27—1—57) இதழ் 197

எரிநட்சத்திரம் தோன்றிய வரலாறு

நிலக்கூறு நிபுணர் தரும் விளக்கம்

கல்கத்தா, சன. 25—

"சூரியனிலிருந்துதான் பூமியும் இதர எரி நட்சத்திரங்களும் உண்டாகி இருக்கவேண்டும் என்று யூகிக்கப்படுகிறது.

"300 கோடி அல்லது 400 கோடி ஆண்டுகளுக்கு முன்பு சூரியனின் அருகாமையில் சென்ற மற்றொரு நட்சத்திரம், அதன் ஓட்டத்தின் காரணமாக சூரியனிலிருந்து சிதறியவற்றிலிருந்து பூமியும் மற்ற கிரகங்களும் தோன்றியிருக்க வேண்டும்," என்று, சர் ஹெரால்ட் ஸ்பென்சர் ஜான்ஸ் என்ற வான - நிலக்கூறு ஆராய்ச்சி நிபுணர் கூறியுள்ளார்.

தி. மு. க. அபேட்சகர்: இரண்டாம் பட்டியல்

அண்ணா, இரா. நெடுஞ்செழியன்

நியமனப் பத்திரம் தாக்கல்

சென்னை, சன. 26—

அண்ணா அவர்கள் நேற்று பகல், செங்கற்பட்டு மாவட்டக் கலெக்டர் முன்பாக, காஞ்சீபுரம் தொகுதிக்கான அபேட்சா பத்திரம் தாக்கல் செய்துள்ளார்கள்.

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சேலம்-1 தொகுதிக்காக, கடந்த 24-ந் தேதியன்று நகரசபை கமிஷனர் முன்பாக தமது அபேட்சா பத்திரத்தைத் தாக்கல் செய்தார்கள்.

தோழர் மு. கருணாநிதி அவர்கள் கடந்த 22-1-57 அன்றே குளித்தலைத் தொகுதிக்கான தமது அபேட்சைப் பத்திரத்தை தாக்கல் செய்துவிட்டார்.

கே. கே. நீலமேகம் குடந்தையில் போட்டியிடுகிறார்

ஆசைத்தம்பி சென்னை—ஆயிரம்விளக்கு தொகுதிக்கு

இளமுரசு நாகூர் அனீபா நாகைத் தொகுதியில் நிற்கிறார்

சென்னை, ஜன. 26—

தேர்தலில் ஈடுபடும் திராவிட முன்னேற்றக் கழக அபேட்சகர்களின் இரண்டாம் பெயர்ப் பட்டியல் இன்று வெளியிடப்படுகிறது. முதல் பட்டியல் கடந்த 19—1—57 அன்று வெளியிடப்பட்டது.

தி. மு. கழகத் தேர்வுக் குழுத் தலைவர் கீழ்க்கண்ட பெயர்ப் பட்டியலை அறிவித்துள்ளார்:—

★★★★★★★★★★★★★★★★

அடுத்த பட்டியல்!

கழக அபேட்சகர்களின் மூன்றும் பட்டியல் 28—1—57 திங்கட்கிழமையன்று வெளி வரும்.

★★★★★★★★★★★★★★★★

சட்டசபை:

சென்னை

ஆயிரம்விளக்கு: ஏ. வி. பி. ஆசைத்தம்பி

வட ஆற்காடு

குடியேற்றம் (பொது): வி. சாம்பசிவம்
(தனி): மணி எழிலன்
ஆம்பூர்: சபபங்கி
திருவண்ணாமலை (தனி): சந்தானம்

நெல்லை

கோவில்பட்டி: ஏ. எஸ். பி. பொன்னுசாமி
ஸ்ரீவைகுண்டம்: ஜெகவீரராஜேந்திரன்
சங்கரன்கோவில் (தனி): சண்முகம்

சேலம்

நாமக்கல் (பொது): வி. காளியப்பன்
கிருஷ்ணகிரி: நாராயணன்
பெண்ணாகரம் (பொது): என். பி. முனுசாமி
சங்கரி (பொது): இரா. தாண்டவன்
திருச்செங்கோடு (தனி): முத்துசாமி
அரூர் (பொது): டி. பொன்னுசாமி
(தனி): சீ. தீர்த்தகிரி
ஆத்தூர் (தனி): டி. இருசப்பன்

தஞ்சை

குடந்தை: கே. கே. நீலமேகம்
நாகை: நாகூர் அனீபா
சீர்காழி (பொது): பொறையார் வி. ஜர்பு
சீர்காழி (தனி): வேலாயுதம்
மாயூரம் (தனி): கே. பிச்சை

திருச்சி

ஆலங்குடி (தனி): ஆ. ஆறுமுகம்

இராமநாதபுரம்

திருவாடானை: இராம. வேள்ளையன்

கோவை

கோவை I: கே. சிவசாமி
பல்லடம்: பொன்னுசாமி
காங்கேயம்: வெள்ளக்கோவில் முத்து
பொள்ளாச்சி (பொது): அ. ச. பாலு
(தனி): இராமசாமி

★★★★★★★★★★★★★★★★

கழக அபேட்சகர்கள் கவனத்திற்கு:

✱

பொதுத் தேர்தலுக்கான அபேட்சா பத்திரங்களை 29—1—57-க்குள் தாக்கல் செய்தாகவேண்டும். 26, 27 ஆகிய இருநாட்களும் சர்க்கார் விடுமுறை தினங்களாகும்; என்றாலும், அந்த இருநாட்களிலும்கூட சட்டசபை, மக்கள் சபைத் தொகுதிகளுக்கு அபேட்சை மனுக்கள் தாக்கல் செய்யப்படுவதை அனுமதிக்க தேர்தல் அதிகாரிக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

சென்னை நகரில் 28—1—57 அன்று சர்க்கார் விடுமுறையாக இருந்தபோதிலும், அபேட்சா பத்திரங்களைத் தாக்கல் செய்து கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

★★★★★★★★★★★★★★★★

'நான் கொலை செய்யப்படுகிறேன்'

10-வது நாளாக உண்ணாவிரதம் இருக்கும் சங்கு கணேசன் அறிக்கை

சென்னை சன. 26—

காங்கிரஸ் தியாகி சங்கு கணேசன் உண்ணாவிரதம் துவங்கி இன்றுடன் 10 நாட்களாகி விட்டன.

அவர் சாகும்வரை உண்ணாவிரதமிருக்கப் போவதாக அறிவித்திருந்தும் காமராசர் ஆட்சி அவரது கோரிக்கைகள் பற்றிக் கவனிக்க முன்வருவதாகக் காணோம்.

இந்த நிலை கண்ட சங்கு கணேசன் அவர்கள், 'நான் காங்கிரஸ் ஆட்சியினால் கொலை செய்யப்படுகிறேன் என்றாலும் அது மிகையாகாது. என்று உருக்கமானதோர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

தமிழ் நாடு என்று தாயகத்திற்குப் பெயரிட வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளுக்காக அவர் உண்ணாவிரதம் இருப்பது தெரிந்ததே!

அகாலிகளுக்கு காங்கிரஸ் இழைத்த 'துரோகம்'

இனி, ஒட்டும் உறவும் கூடாதெனக் கண்டனம்

புதுடில்லி, சன. 25—

பஞ்சாப் மாநிலத்தில் 146 சட்டசபைத் தொகுதிகளுக்கும் 19 மக்கள் சபைத் தொகுதிகளுக்குமாகப் போட்டியிடும் காங்கிரஸ் அபேட்சகர்களின் பட்டியலில மக்கள் சபைக்கு 3 டிக்கெட்டுகளும், சட்டசபைக்கு 23 டிக்கெட்டுகளுமே அகாலிதளத்தவருக்கென ஒதுக்கப்பட்டிருந்தது.

இதனால் பெருத்த ஏமாற்றம் அடைந்துள்ள அகாலிதளத்தவர், 'அபேட்சகர்கள் தேர்வு, வகுப்புவாரி அடிப்படையில் நடைபெற்றிருக்கிறது' என்று இப்போது கூறுகின்றனர்.

'தகுதியையும் திறமையையும் அடிப்படையாகக் கொண்டே அபேட்சகர் தேர்வு நடைபெற்றது எனக் கூறப்படுவது, வெறும் கண்துடைப்புப் பேச்சே—நம்பத்தக்கதல்ல' என்று மாஸ்டர் தாராசிங் கூறியிருக்கிறார்.

நேற்று நடைபெற்ற அகாலிதளத் தலைவர்களின் இரகசியக் கூட்டத்தில்,சில எதிர்ப்பு யோசனைகள் கூறப்பட்டதாகவும், என்றாலும் பெரும்பான்மை உறுப்பினர்கள், காங்கிரசிலிருந்து அகாலிதளம் பிரிந்து செயலாற்றுவதையே விரும்புவதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அகாலிதளத்தில் உள்ள முக்கியமான வேறு சிலர் காங்கிரசின் இந்த துரோகத்தனத்தை மிகத் தீவிரமாகக் கண்டித்திருக்கின்றனர் என்றும், இனிமேலும் தாங்கள் காங்கிரசுடன் எவ்வித ஒட்டோ-உறவுமோ வைத்துக்கொள்ள விரும்பவில்லை என்றும் அமிர்தசரசிலிருந்து தனக்குத் தகவல் கிடைத்துள்ளதாக அகாலிதள உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளாராம்.

காஷ்மீர் அரசியல் சட்டம் அமுல்

ஜம்மு, சன. 26—

கடந்த நவம்பர் 17-ம் தேதி நிறைவேறிய காஷ்மீர அரசியல் சட்டம், இன்று அமுல் செய்யப்பட்டது.

சட்டத்தை நிறைவேற்றிய அரசியல் நிர்ணய சபை நேற்று சிறிது நேரம் கூடியிருந்துவிட்டு, இரவு 12 மணியானதும் கலைந்தது.

(4-ம் பக்கம் பார்க்க)

தி. மு. கழகம் மக்களிடை அரசியல் ஆர்வத்தை ஊட்டியுள்ளது

தேர்தலில்குறிப்பிடத்தகுந்தவிளைவு?

சென்றமுறை வாக்குகளைப் பயன்படுத்தாத சாமானியர்கள் இம்முறை வாக்குப் பதிவு செய்வர்

தி. மு. கழகத் தேர்தல் பிரச்சாரம் குறித்து வடநாட்டு இதழ் கருத்து

"வரப்போகும் தேர்தலில் (தமிழ் நாட்டைப் பொறுத்து) ஏற்படக்கூடிய விளைவுகளுள் ஒன்று, சென்ற தேர்தலில் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்தாத கல்வியறிவற்ற பெரும் பகுதி மக்கள், இந்தத் தேர்தலில் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்துவர். இது சாத்தியம் என்பதற்குக் காரணம், திராவிட முன்னேற்றக் கழகம் நல்லதோர் அடிப்படையை உருவாக்கியிருக்கிறது என்பதுதான்"

என்று, கல்கத்தாவிலிருந்து வெளிவரும் 'இந்துஸ்தான் ஸ்டாண்டர்டு' என்ற ஆங்கில தினசரி, 19—1—57-ம் தேதிய இதழில் பிரசுரித்துள்ள அதன் சென்னை நிருபர் கடிதத்தில் காணப்படுகிறது.

மேலும் அந்தச் செய்தியில் காணப்படுவதாவது:—

'திராவிட முன்னேற்றக் கழகப் பிரச்சாரம், முழுவேகத்தில் துவங்கப்பட்டுவிட்டது இந்த ஒரு ஒழுங்குமுறையான—நன்கு திட்டமிடப்பட்ட பிரச்சாரத்தினால் என்ன விளைவு ஏற்படக்கூடுமோ என்று தமிழ் நாட்டில் உள்ள காங்கிரசாராலேயே நிர்ணயிக்கப்பட முடியவில்லை.

"சுதந்திரத்திற்குப் பின்னர் காங்கிரஸ் சோம்பிக் கிடப்பது மிகப் 'பிரபல'மானதாகும்; இந்த நெருக்கத்தில் கூட, காங்கிரஸ் ஊழியர்கள் நாடெங்கிலும் சென்று வாக்காளர் பட்டியல் எப்படி பூர்த்தியாகிறது என்பதைக்கூடக் கவனிக்கவேண்டும் என்று அக்கறை கொண்டதில்லை.

"எல்லோரும் அறிந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல், இங்குள்ள எல்லாப் பிரிவு மக்களிடையேயும் இன்று குறிப்பிடத்தகுந்த அரசியல் ஆர்வத்தை ஊட்டியுள்ளது.

"மக்களின் இந்தப் புதிய அரசியல் ஆர்வத்தை அறியவேண்டுமென இந்தியாவில் உள்ள எந்த ஒரு அரசியல் கட்சியேனும் அறிந்துகொள்ள விழையுமானால், அவர்கள் சென்னைக்குச் சென்று, முன்னேற்றக் கழகத் தேர்தல் இயக்கத்தை ஆராய்ந்து அறியலாம்."

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 26—1—'57 சனி

தேர்தல் அதிகாரி செய்வாரா?

நடைபெற இருக்கும் பொதுத் தேர்தல் ஒழுங்காகவும் நேர்மையாகவும் நடைபெற வேண்டும் என்பதில் நாட்டின் நல்லறிவாளர்கள் எவருக்கும் கருத்து வேற்றுமை இருக்க முடியாது. அந்த இலட்சிய நிலையை நடைமுறையில் காணவேண்டும் என்பதுதான் நமது முன்னேற்றக் கழகத்தின் குறிக்கோளும் ஆகும். அதற்காகத் தனது சக்திக்குட்பட்ட எந்தவிதத் தியாகத்தையும் செய்வது என முன்னேற்றக் கழகம் இந்தத் தேர்தலில் குளுரைத்துக் கொண்டு இருக்கிறது.

தேர்தல் நேர்மையாகவும் ஒழுங்காகவும் நடைபெறுவதற்கான அறிவுரைகளையும் ஆணைகளையும், முறையே பொதுமக்களுக்கும் தேர்தல் துணை அதிகாரிகளுக்கும் முதன்மைத் தேர்தல் அதிகாரி அடிக்கடி வெளியிட்டும் வருகிறார். உண்மையிலேயே அவருடைய வேண்டுகோளை அதிகாரிகளும், அபேட்சகர்களும், வாக்காளர்களும் திரிகரண சுத்தியாகச் செயலாற்ற முந்துவார்களேயானால், அவரும் நாமும் விரும்புகிறபடி தேர்தல் நேர்மையாகவும் ஒழுங்காகவும் நடைபெறுவது சாத்தியமாகக்கூடும் என்பதில் ஐயமில்லை.

வாக்காளர்களின் ஆதரவைப் பெறுவதற்காக, சட்டவிரோதமான செயல்களையும் ஒழுங்கற்ற முறைகளையும் அபேட்சகர்கள் மேற்கொள்ளக் கூடாது என்றும், அப்படி மேற்கொள்ளுவதை தங்களுக்கு இழைக்கப்படும் அவமானமாக வாக்காளர்கள் கொள்ளவேண்டும் என்றும், ஆதரவைக் கோரி தீய முறைகளை மேற்கொள்ளும் அபேட்சகர்களைக் கண்டிப்பாக வாக்காளர்கள் வீழ்த்தவேண்டும் என்றும் தேர்தல் முதன்மை அதிகாரி கோரியுள்ளார். இந்த வகையில் காங்கிரசுக் கட்சியினர் இதுவரை எவ்வாறு நடந்து வந்திருக்கின்றனர் என்பதை ஏற்கனவே சுட்டிக்காட்டியும் உள்ளோம்.

தேர்தலில் வாக்காளர்களின் ஆதரவைப் பெறுவதற்குக் காங்கிரசு அபேட்சகர்கள் எத்தகைய முறையில்லா முறைகளையும் பின்பற்றத் தயாராக இருக்கின்றனர் என்பதற்கு, மறுக்க முடியாத ஒரு ஆதாரத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தாங்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்து சாதித்துள்ளதாகக் கூறப்படும் சாதனைகளை தங்கள் கட்சி மேடைகளின் மூலமும் ஏடுகளின் மூலமும், காங்கிரசு அபேட்சகர்கள் எடுத்துக் கூறி விளக்கம் தருவதை ஒருவரும் நேர்மையற்ற செயல் என்று கூறமாட்டார்கள். அதற்கான உரிமை அவர்களுக்கு என்றும் உண்டு என்பதை மறுப்பவர்களும் இருக்க முடியாது. அவ்வாறு கட்சி நிலையில் பிரசாரம் செய்வது, ஒழுங்கற்ற முறையில் வாக்காளர்களின் ஆதரவைப் பெற முயலுவதாகவும் ஆகாது. அதுவே நேர்மையான முறையுமாகும்.

சனநாயக அமைப்பில், தேர்தலில் பங்குகொள்ளும் ஒரு கட்சி கையாளக்கூடிய கண்ணியமான செயல் முறையுமாகும்.

மேற்குறிப்பிட்ட அளவுடன், காங்கிரசுக் கட்சி இன்றைய தேர்தலில் நடந்துகொள்கிறதா? இல்லை; முக்காலும் இல்லை.

பொதுமக்கள் வரிப் பணத்தைச் செலவிட்டு, தேசிய வளர்ச்சித் திட்டம் என்றும் வட்டார வளர்ச்சித் திட்டம் என்றும் நடைபெற்று வருகின்ற அமைப்புகளைக் கொண்டு, அவைகளுக்குரிய பிரசார சாதனங்கள் முழுவதையும் தீவிரமாகப் பயன்படுத்தி, காங்கிரசு அபேட்சகர்களுக்கு ஆதரவு தேடுவதில் காங்கிரசு அரசாங்கம் இப்பொழுது முனைந்திருக்கிறது. அந்த அமைப்புகளின் பிரசார சாதனங்கள் முழுவதும் காங்கிரசு அபேட்சகர்களுக்கு வாக்கு சேகரிப்பதில் மிகமிகத் தீவிரமாக ஈடுபடுத்தப்பட்டுவருகின்றன காங்கிரசு ஆளவந்தார்களால்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் காங்கிரசு அரசாங்கம் சாதித்துள்ள அரும் பெரும் சாதனைகளைப் பாரீர்; இரண்டாவது திட்டத்தில் சாதிக்கப் போகும் சாதனைகளைக் காணீர்; —என்று அப்பிரச்சார சாதனங்கள் இந்தத் தேர்தல் சூழ்நிலையில், கிராமம் கிராமமாகச் சென்று முழக்கமிடுவது காங்கிரசு அபேட்சகர்களுக்குப் பேராதரவாக இருக்காது என்று எந்த அறிவிலியும் கூறத் துணியமாட்டான்.

தேர்தல் முடிந்த பிறகு தேசிய வளர்ச்சி ஏற்பாட்டின் சிறப்பு குறித்தோ, வட்டார வளர்ச்சி திட்டத்தின் முக்கியத்துவம் குறித்தோ, பொது மக்களிடத்தில், அவ்வமைப்புகள் பிரசாரத்தில் ஈடுபடுவதை எவரும் குறைகூற முடியாது. அந்நிலையில் அப்பிரசாரங்களின் பலனைக் காங்கிரசுக் கட்சியினர் பெறப் போகின்ற பலனும் அதிகமாக இருக்கமுடியாது.

தேர்தல் முடிகின்றவரையில் தேசிய வளர்ச்சி அமைப்புகளின் நற்பணி குறித்தும் வட்டார வளர்ச்சி ஏற்பாடுகளின் நல்வினைகள் பற்றியும், அவ்வமைப்புகளின் பிரசார சாதனங்கள் செயலற்றுக் கிடப்பதே விரும்பத் தகுந்ததும் வரவேற்கத் தகுந்ததுமாகும். தேர்தலுக்குப் பிறகு, அப்பிரசார சாதனங்கள் அவ்வமைப்புகளின் நற்பணி குறித்துப் பிரச்சாரம் செய்ய முன்வந்தால், அதை மக்கள் கேட்க மறுப்பர் அல்லது மக்களால் புரிந்துகொள்ள முடியாது எனக்கூற எவருக்கும் துணிவு இருக்க முடியாது. தேர்தல் நேரத்தில் அவ்வாறு பிரச்சாரம் செய்தால்தான், அவ்வமைப்புகளால் தங்களுக்கு விளையக்கூடிய நற்பலனையும் நன்னிலையையும் மக்கள் புரிந்துகொள்ளுவது சாத்தியமாகும் எனக் கூறக்கூடிய மந்தமதியும் இருக்க முடியாது. சிறக,

தேசிய வளர்ச்சி ஏற்பாடுகளிலும் வட்டார வளர்ச்சி அமைப்புகளிலும் நியமிக்கப்பட்டுள்ள அரசாங்க அதிகாரிகள் ஒவ்வொருவரும், பொது மக்கள் தரும் வரிப்பணத்திலிருந்து ஊதியம் பெறுகிறவர்கள் ஆவர். அவர்கள் இந்தத் தேர்தலில் எந்தக் கட்சியுடனும் தொடர்பு கொள்ளாது, நடுநிலைமையாக நடந்துகொள்ள கடமைப்பட்டிருக்கின்றார்கள். அதைத்தான் பொதுமக்களும் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றனர்.

பெரும்பான்மையான அதிகாரிகள், நடுநிலைமையாக நடந்துகொள்ளுவதைத்தான் விரும்புகின்றனர் என்பதிலும் நமக்கு ஐயமில்லை. யாரோ இரண்டொரு அதிகாரிகள், நடுநிலைமையிலிருந்து வழுவி, காங்கிரசுக் கனவான்களுக்குக் கட்டியம் கூறுபவர்களாக இருக்கக்கூடும். அவர்களும், தங்கள் பதவியைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும் என்ற அச்சத்தின் காரணமாகவே, காங்கிரசுக் குணவான்களுக்குக் கட்டியங்கூறுவதாக இருக்கக்கூடும்.

அந்த இரண்டொரு தவறிழைக்கின்ற அதிகாரிகளைக் கொண்டு, அவ்வமைப்புகளில் பதவி பெற்றுள்ள அரசாங்க அதிகாரிகள் அனைவரையும் மதிப்பிட நாம் விரும்பவில்லை. நேர்மையான அதிகாரிகளை நாம் பாராட்டுகிறோம்.

நடைபெற இருக்கும் தேர்தலில் நேர்மையும் ஒழுங்கும் ஆட்சிபுரிய வேண்டும் என்பதில் அக்கறை தங்களுக்கு இயல்பாக இருக்குமானால், உடனடியாக தேசிய வளர்ச்சி ஏற்பாடு, வட்டார வளர்ச்சித் திட்டம் ஆகிய அமைப்புகளின் அதிகாரிகளை, அவர்கள் விருப்பத்திற்கும் பொது ஒழுக்கத்திற்கும் மாறாக, தங்கள் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுத்தி வரும் அக்கிரமத்திற்கு உடனடியாக முற்றுப்புள்ளிவைக்க காங்கிரசு ஆளவந்தார்கள் முன்வரவேண்டும். அவ்வாறு தாங்களாக வேண்டுமென்றே தெரிந்து செய்யும் ஒழுக்கக் கேட்டைக் கைவிட, காங்கிரசு ஆளவந்தார்கள் தாங்களாக முன்வரமாட்டார்கள் என்பது நிச்சயத்திலும் நிச்சயமாகும்.

தேர்தல் நேர்மையாகவும், ஒழுங்காகவும் நடைபெற வேண்டும் என்பதில் பொறுப்பும் கடமையும் கொண்டுள்ள முதன்மைத் தேர்தல் அதிகாரிதான், இத்துறையில் தலையிட்டு தடைவிதிக்க முன்வர வேண்டும். அவர், இது விஷயத்தில் கண்டிப்பாக இருந்தாக வேண்டும்.

அப்படி தடை விதிப்பதின் மூலம்தான், தேர்தல் ஒழுங்காகவும் நேர்மையாகவும் நடைபெறுவதில் முதன்மைத் தேர்தல் அதிகாரிக்கும் உண்மையான அக்கறை இருந்து வருகிறது என்பதும் மெய்ப்பிக்கப் பட்டதாகும். இல்லையேல், தேர்தல் அதிகாரியின் நல்லெண்ணத்திலேயே வாக்காளர்களுக்குச் சந்தேகம் ஏற்படுவது இயல்பேயாகும்.

இதுபற்றி, மக்கள் சபை உறுப்பினராகவும், சென்றகால சென்னை சட்டசபைத் தலைவராகவும் இருந்த பி. இராமச்சந்திரன் அவர்களின் முறையீட்டை நேற்று 'நம் நாடு' இதழில் வெளியிட்டுள்ளோம். அவர் முறையீட்டில் உள்ள நியாயத்தைத் தேர்தல் அதிகாரியால் ஒப்பாமல் இருக்க முடியாது. எனவே, தேர்தல் அதிகாரி காங்கிரசு ஆளவந்தார்கள், பொதுமக்கள் வரிப்பணத்தில் தங்கள் அபேட்சகர்களுக்கு ஆதரவு தேடி பிரசாரம் செய்யும் ஒழுங்கற்ற முறைக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்க முன்வரவேண்டும் என வலியுறுத்திக் கூறுகிறோம்.

புராண இதிகாசப் புளுகுகளைக் காப்பாற்ற!

மக்களை நிரந்தரமாக மடமையில் ஆழ்த்த!

படத் தணிக்கை போர்டின் முயற்சி

சென்னை, ஜன 24—

புராணக் கதைகள், செகோட்டமாக அமைக்கப்பட்டவரும் கதைகள் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு தயாரிக்கப்படும் சினிமாப் படங்களுக்கு அக்காட்சிப் பத்திரம் வழங்குவது பற்றி மத்திய திரைப் படத் தணிக்கை போர்டு மையமும் கொள்கை விளக்கப்பட்டிருக்கிறது.

புராணங்களில், மக்கள் அறிந்த ஒரு கதையை அதிகாரபூர்வமாகவும் திரித்துக் காட்டாமலும் படம் பிடித்துத் திரையிடுவதைப் பொது மக்கள் விரும்புவார்களாம்; ஆனால் தெய்வீகக் கதாபாத்திரங்களை கதையை இழிவுபடுத்தும் முறையில் திரைப் படமாக்கிக் காட்டினால் அது படம் பார்ப்பவர்களில் பலரது மதவுணர்ச்சியைப் புண்படுத்துமாம்.

மக்களில் பெரும் பகுதியினர் வழிபட்டுவருகிற அல்லது பயபக்தியோடு கொண்டாடிவருகிற தெய்வீக கதாபாத்திரங்களின், கொடிய குற்றங்களையும் ஆபாசங்களையும், ஒழுக்கக் குறைவையும் உண்மையிலேயே பதியக்கூடியபடி படம் பிடித்துக்காட்டினால் படம் பார்ப்பவர்களில் பலர் ஆத்திரமடைய விட்டாலும் நிச்சயமாய் அருவருப்பாவது கொள்ளுவார்களாம்.

அததகைய நடவடிக்கைகளை அவர்கள் செய்ததாகப் புராணச் சம்பவங்கள் விவரித்தபோதிலும் கூட, படமாக்கக்கூடாதாம்!

நாடக அம்சத்தைச் சேர்க்கச் செய்வதற்காகக் கதையைச் சிறிது மாற்றி எழுதக்கூடிய சுதந்திரம் இருக்கவேண்டுமென்பதை போர்டு உணர்ந்தபோதிலும், தெய்வீகப் பாத்திரங்களின் செய்கைகளைப் படம் பிடித்துக் காட்டும்போது அடக்கமும், கண்ணியமும் கையாளப்பட வேண்டுமென்பதுதான் முறையாகுமாம்!

தன்னையே பலியிடுவது, நரபலியிடுவதுபோன்ற மக்களுக்கு அதிர்ச்சியை ஊட்டக்கூடிய சடங்கு முறைகளைப் படம் பிடிக்கக்கூடாதாம்!

இதர விஷயங்களைப் பொறுத்த மட்டில், போர்டு, புராண வரலாற்றுப் படங்களைப் பரிசீலிக்கும் போது தற்கால இதர கதைப் படங்களைப் பரிசீலிப்பதில் கையாளுகிற அதே கொள்கை முறைகளைக் கூடுமானவரையில் கையாளுவதெனத் தீர்மானித்திருக்கிறதாம்!

தனியார் துறைக்கு திடீர் சலுகை

இயந்திரங்கள் இறக்குமதிசெய்ய மத்தியப் பேரசு அனுமதிக்கிறது

புதுடில்லி, ஜன 24—

சென்ற ஆண்டு ஆரம்பத்தில 740 கோடியாக இருந்த ஸ்டர்லிங் நிலுவை தற்போது 533 கோடியாகக் குறைந்துவிட்டதாம்.

எனவே, இன்னும் 6 மாத காலத்திற்கு இயந்திரங்களை இறக்குமதி செய்ய தனியார் துறைக்கே அனுமதி வழங்குவதென மத்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளதாம்.

அணுசக்திக் கார்கள்!

புதுடில்லி, ஜன 24—

அணுசக்தியால் இயங்கும் கார்களும் லாரிகளும் உற்பத்தி செய்யப்படும் என்று ரஷ்ய என்ஜினியர்கள் தகவல் தந்துள்ளனர்.

அணு யுத்தத்திற்கு அமெரிக்கா தயாரிக்கிறது

சோவியத் ரஷ்யாவின் எச்சரிக்கை

லண்டன், ஜன 24—

"அன்னியத் திட்டங்களில் தனக்குள்ள இராணுவத் தளங்களை பயன்படுத்திக்கொண்டு அமெரிக்கா ஒரு அணுகுண்டு யுத்தத்தில் இறங்க தன்னைத் தயாரித்துக்கொண்டிருக்கிறது" என்று, மாஸ்கோ வானொலி இன்று அறிக்கை விடுத்திருக்கிறதாகத் தெரிகிறது.

அந்த அறிவிப்பில், அமெரிக்காவும் அதற்கு அணு ஆயுதத் தளங்களை வைத்துக்கொள்ள அனுமதிக்கும் நாடுகளும், தங்கள் போக்கின் விளைவுகளை சீக்கிரமே உணருவர் என்றும் எச்சரிக்கை தரப்பட்டிருக்கிறதாம்.

அரியலூர் விபத்து

நஷ்ட ஈடு கோரி 120 மனுக்கள்

சென்னை, டிச 25—

அரியலூர் இரயில் விபத்து காரணமாக நஷ்ட ஈடு கோரி 120 மனுக்கள் வந்தனவாம்; இவற்றில் 5 மனுக்களைப் பரிசீலனை செய்து மூன்று மனுக்கள் அனுமதிக்கப்பட்டு இரண்டு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டனவாம்.

மூன்று மனுக்களில் சம்பந்தப்பட்டவர்களுக்கு மொத்தம் ரூ 12 000-க்கு நஷ்டஈடு தருமாறு நஷ்ட ஈடு கமிஷனர் தீர்ப்பளித்திருக்கிறார்.

இலங்கை இந்தியர் குடியுரிமை மனுக்கள்

சர்க்கார் தரும் புள்ளி விவரம்

கொழும்பு, ஜன 24—

இலங்கை வாழ் இந்தியர்களின் குடியுரிமை மனுக்களைப் பைசல் செய்வதற்காக இலங்கை சர்க்கார் இதுவரையில் ரூ 1,28 00 000-செலவிட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு குடியுரிமைமனுவுக்குச் சராசரி ரூ 54 வீதம் செலவாகியுள்ளதாம்.

8,25 000 பேருக்குக் குடியுரிமை கோரி 2 37 000 மனுக்கள் வந்தன; இவற்றில் 1956 நவம்பர் வரை 1,53,790 மனுக்கள் இறுதியாகப் பைசல் செய்யப்பட்டுவிட்டதாகச் சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

14,786 மனுக்களை சர்க்கார் ஏற்றுக்கொண்டனர்; இவற்றின் மூலம் 53,524 பேருக்குக் குடியுரிமை அளிக்கப்பட்டுள்ளது. 4,49 777 பேர் சம்பந்தப்பட்ட 1 39 004 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

குடியுரிமை மனுக்களைப் பைசல் செய்யும் வேலை இந்த வருடம் பூர்த்தியாகுமென்று சர்க்கார் எதிர்பார்க்கின்றனராம்.

விமான அமைப்பில் புதியதோர் கட்டம்!

புதுடில்லி, ஜன. 28—

பறவையைப்போல் இறகைகளை அடித்துக்கொண்டு பறக்கும் விமானம் ஒன்றைத் தயாரித்து, ரஷ்ய நிபுணர்கள் பரீட்சித்துப் பார்த்திருப்பதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

புதிய முறையில் தயாரிக்கப்படும் இந்த விமானம் அதிக வேகமாகவும், அதிக உயரத்தில் பறக்கக் கூடியதாகவும் இருக்குமாம். விசை எண்ணெய்ப் பிரச்சினையில்கூட சிக்கனத்தைக் கையாளக் கூடியதாக இருக்குமாம்!

தமிழகத்தில் தேர்தல் நாட்கள்:

பிரான்மலையில் தேர்தல் குழு அமைப்பு

பிரான்மலை, சன 25—

கடந்த 10-ந் தேதியன்று இங்கு, தி. மு. கழகம், அண்ணா மன்றம், உழவர் சங்கம் ஆகியவற்றின் பொது உறுப்பினர் கூட்டம் ஒன்று நடைபெற்றபோது, பிரான்மலை தேர்தல் குழு ஒன்று அமைக்கப்பட்டு, அதன் தலைவராகத் திரு சி. முத்துக்குமாரும், துணைத் தலைவர், செயலாளர், துணைச்செயலாளராக முறையே தோழர்கள் பழ. சொக்கலிங்கம், சே. சி. சாமி பெரி. பழனிசாமி ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். திரு. ஞா. தியாகராசு, தேர்தலில் பணியாற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்து விளக்கம் தந்தார்.

(ந. - நி.,

திருப்பூர் தி. மு. கழக ஆலை தொழிலாளர் தேர்தல் நிதி

12—1—57 மாலை 6 மணிக்கு திருப்பூர் வழிப்போக்கர் விடுதியில், தி. மு. கழக ஆலைத் தொழிலாளர் தேர்தல் நிதிச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. இதுவரை வசூலான ரூ 170-ம், திருப்பூர் நகர தி மு கழகச் செயலாளர் தோழர் முத்துரத்தினம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் நிதி திரட்டி தேர்தல் நிதிக்கு ரூ. 500 கொடுப்பதென முடிவு செய்யப்பட்டது.

தேர்தல் வேலைகளில்!

ஐக்கத்துடன் ஒத்துழைக்க கழகத் தோழர்களின் வாக்குறுதி

திருக்கோயிலூர், சன 25—

வருகிற பொதுத் தேர்தல்களில் கழகத் தோழர்கள் ஒவ்வொருவரும் ஆற்றவேண்டிய பணிகள் குறித்தும் நடைமுறைகள் குறித்தும், இவ்வூர் தி மு கழக இல்லத்தில் கடந்த 23-ந் தேதி இரவு நடைபெற்ற செயற்குழு உறுப்பினர் கூட்டத்தில், கிளைச் செயலாளர் தோழர் செ. வீ கீர்த்தி விளக்கி, உறுப்பினர்கள் அனைவரின் தனிப்பட்ட கருத்துக்களையும் தனித்தனியே விசாரித்தார். கழக உறுப்பினர்கள் அனைவரும் பொதுத் தேர்தலில் உண்மையுடனும் ஐக்கத்தோடும் ஒத்துழைப்பதாக உறுதி கூறினர்.

இக்கூட்டத்திற்கு திருக்கோயிலூர் தொகுதியில், தி மு. கழகச் சார்பில் போட்டியிடும் தோழர் டி. என் ஜி அண்ணாமலை தலைமை வகித்தார். (ந-நி)

யானைச் சின்னம் ஒதுக்கக் கோரிக்கை!

சென்னை, சன. 24—

'தமிழ் நாடு காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டி'யினர் தேர்தலில் தங்களுக்கு யானைச் சின்னம் ஒதுக்கித்தருமாறு கேட்பார்கள் என்று தெரியவருகிறது.

மறுப்பு

"24-1-57 (வெளியூர்) 'பன்னீர் துளி' பத்திரிகையில், 'கடலூர் கண்ணீர்த் துளி விலகல்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட செய்தி தவறாகும். கடந்த 1952—ல் நடைபெற்ற நகர் மன்றத் தேர்தல்களில் தவறாக நடந்துகொண்ட காரணத்திற்காக அவர் அப்போதே நீக்கப்பட்டார்; பின்னர் அவர் சேர்க்கப்படவே இல்லை. எனவே அவர் தி. மு கழகத் தோழர் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்"

என்று கடலூர் நகர தி மு கழகப் பொருளாளர் எஸ். அஜீஸ் அறிவிக்கிறார்.

தோழர்கள் கவனத்திற்கு

தமிழகத்தில் தேர்தல் நாட்களாக—மார்ச் 1, 4, 6, 8, 11 ஆகிய ஐந்து நாட்களும் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன; மார்ச் 1, 4 ஆகிய முதல் இருநாட்களிலும் எங்கெங்குத் தொகுதிகளில் வாக்குப் பதிவு நடைபெறும் என்பதை நேற்றைய இதழில் வெளியிட்டிருந்தோம்; இங்கு 6, 8, 11 ஆகிய மூன்று நாட்களிலும் வாக்குப் பதிவு நடைபெறும் தொகுதிகளின் விபரம் தரப்படுகிறது:—

மூன்றும் நாள்: மார்ச் 6.

★

மக்கள் சபைத் தொகுதிகள்	சட்டசபைத் தொகுதிகள்
திருவள்ளூர்:	கும்மிடிபூண்டி, திருவள்ளூர், அரக்கோணம், சோளிங்கநூர்.
திருப்பத்தூர்:	செங்கம், வாணியம்பாடி, திருப்பத்தூர், அரூர்.
சேலம்:	ஏர்க்காடு, சேலம் I, சேலம் II, வீரபாண்டி.
கடலூர்:	விழுப்புரம், உளுந்தூர்ப்பேட்டை, கடலூர், நெல்லிக்குப்பம்.
தஞ்சாவூர்:	தஞ்சை, கந்தர்வகோட்டை அதிராமபட்டினம், பட்டுக்கோட்டை, அறந்தாங்கி.
திருச்சிராப்பள்ளி:	திருச்சிராப்பள்ளி I, திருச்சிராபபள்ளி II, ஸ்ரீரங்கம், முசிறி.
திண்டுக்கல்:	நிலக்கோட்டை, மேலூர், வட மதுரை, வேடசெந்தூர், திண்டுக்கல், ஆத்தூர், ஒட்டன் சத்திரம், பழனி.
நீலகிரி:	சூலூர், அவினாசி, மேட்டுப்பாளையம், கூனூர், உதகமண்டலம்.

நான்காம் நாள்: மார்ச் 8.

★

மக்கள் சபைத் தொகுதிகள்	சட்டசபைத் தொகுதிகள்
சென்னை—வடக்கு:	வண்ணாரப்பேட்டை, ஹார்பர், பேசின்பிரிட்ஜ், பெரம்பூர்.
சென்னை—தெற்கு:	ஆயிரம்விளக்கு, எழும்பூர், திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், தியாகராயநகர்.
நாமக்கல்:	நாமக்கல், சேந்தமங்கலம், இராசிபுரம், ஆத்தூர், அரவக்குறிச்சி, காங்கேயம், சென்னிமலை, ஈரோடு.
சிதம்பரம்:	கள்ளக்குறிச்சி, திருக்கோயிலூர், கல்லூர், விருத்தாசலம், புவனகிரி, சிதம்பரம, ஜெயங்கொண்டான்.
இராமநாதபுரம்:	சிவகங்கை, திருவாடானை, மானாமதுரை, பரமக்குடி, இராமநாதபுரம்.
திருநெல்வேலி:	தூத்துக்குடி, ஸ்ரீ வைகுண்டம், திருநெல்வேலி, ஆலங்குளம்.

ஐந்தாம் நாள்: மார்ச் 11.

★

மக்கள் சபைத் தொகுதிகள்	சட்டசபைத் தொகுதிகள்
வேலூர்:	செய்யாறு, வந்தவாசி, ஆற்காடு, இராணிப்பேட்டை, குடியேற்றம், வேலூர், ஆம்பூர்.
நாகப்பட்டினம்:	சீர்காழி, மாயூரம, நன்னிலம், நாகப்பட்டினம, திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி.
கரூர்:	அன்னவாசல்லூர், கரூர், குளித்தலை, பஞ்சப்பட்டி, மணப்பாறை.
நாகர்கோயில்:	நாகர்கோயில், குளச்சல், பத்மநாபபுரம், கிள்ளியூர், விளவன்கோடு.
மதுரை:	உசிலம்பட்டி, திருமங்கலம், மதுரை—கிழக்கு, மதுரை—(மத்தியப் பகுதி), திருப்பரங்குன்றம்.
கோயம்புத்தூர்:	திருப்பூர், பல்லடம், கோயம்புத்தூர்-1, கோயம்புத்தூர்-2,

* *

தேர்தல் பிரச்சாரப் பாடல்கள்:

'மாட்டை' ஆள விடாதீர்!

★

(ஏன்ற விடது தோளும் கன்னும்......எ. மெட்டு)

நாட்டின் அவலநிலை போக்க உனக்கிதுவே
நல்லதோர் நேரம் எண்ணிப் பார்! பார்! பார்! தோழா!
வாட்டம் அடைந்திட்டதே! வஞ்சர் ஆட்சியால் இன்றுன்
வாழ்வழிந் திட்ட தெண்ணிப் பார், பார், பார், தோழா!

பேச்சொன்று பேசிச்செயல் வேறொன்று கைக்கொள்ளும்
பேதைய நன்டோ வேறு சொல், சொல், சொல், தோழா!
'ஏச்சும் இழிநிலையும் என்னும் பதவி முன்னல்'
என்பவர் ஆளலாமோ? சொல், சொல், சொல் தோழா?

வாட்டும் வரிகள்பல போட்டு நமை நசுக்கும்
வஞ்சகர் ஆட்சி இன்னும் ஏன்? ஏன்? ஏன் தோழா?
பாட்டுப் பாடியே கெஞ்சிப் பல்லிளித்தாலும் நீதான்
பரிதாபம் கொள்ளலாமோ? சொல், சொல், சொல் தோழா?

ஒட்டளிப் பாய்உதய சூரியன் பெட்டி தன்னில்
உன்வாழ்வு மேலோங்கும் பார், பார், பார், தோழா!
மாட்டை யாளவே விட்டால் வறுமை, கொடுமை யெல்லாம்
மலிந்திடும்! வேண்டாம் எண்ணிப் பார், பார், பார், தோழா!

(நாட்டின்)

—புதுவைச் சிவம்

* *

எவருடனும் கூட்டுச் சேரமாட்டோம்

மைசூர் பி. சோ. கட்சி முடிவு

125 சட்டசபை இடங்களுக்குப் போட்டியிடுகின்றனர்

பெங்களூர், சன. 25—

மைசூரில் பி. சோ. கட்சியினர், கம்யூனிஸ்டுகள் உட்பட வேறெந்த கட்சியுடனும் தேர்தல் கூட்டுச் சேராது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பி சோ. கட்சியினர் தனித்து, மாநிலத்தில் உள்ள மொத்தம் 208 இடங்களில் 125 இடங்களுக்கும் மக்கள் சபைக்குள்ள 26 இடங்களில் 18 இடங்களுக்கும் போட்டியிடுவர் என்று திரு எஸ். குருபாதசாமி கூறியிருக்கிறார்.

தேர்தல் தொகுதிகள்

சில ருசிகரத் தகவல்கள்

புதுடில்லி, சன 24—

மைசூர் மாநிலத்தில் உள்ள மங்களூர் மக்கள் சபைத் தொகுதிதான், இந்தியாவிலேயே பெரிய தொகுதியாம். அதில் மொத்தம் 8,08 211 மக்கள் வசிக்கிறார்களாம்.

மிகச் சிறிய தொகுதி உத்தரப் பிரதேசத்தில் உள்ள அல்மோரா தொகுதியாம். அதில், மொத்தம் 6,51,099 பேர் வசிக்கிறார்களாம்.

சட்டசபைத் தொகுதிகளிலேயே மிகப் பெரியது உ. பி.-யில உள்ள புதானு எனும் தொகுதியாகுமாம்; இதன் மக்கள் தொகை 1,72,895 ஆகும்.

மிகச் சிறிய தொகுதி தென் சிம்லஞ்ச் என்ற அசாம் தொகுதியாகும்; இதில் 76,650 பேர்களே வசிக்கின்றனராம்

மக்கள் சபைக்கான தொகுதிகளின் சராசரி மக்கள் தொகை 7,85 000 ஆகும்.

சட்டசபைத் தொகுதிகளின் சராசரி மக்கள் தொகை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறதாம்.

மக்கள் சபைக்கான தொகுதியிலோ அல்லது சட்டசபைக்கான தொகுதியிலோ சராசரி மக்கள் தொகை அதிகமாயிருப்பது மிகவும் சிறிய மாநிலமான கேரளத்தில் தானும், மிகக் குறைவாயிருப்பது, அசாம் மாநிலத்திலாம்.

வட ஆற்காடு மாவட்டத்தில் வாக்காளர் தொகை

ஒரு புள்ளி விவரம்

வேலூர் சன 24—

வட ஆற்காடு மாவட்டத்தில் மொத்தம் 16 18 205 வாக்காளர்கள் இருக்கின்றனர்; இதில் 8,06,697 பேர் ஆண்கள்—8,06 508 பேர் பெண்களாவர் என்று தகவல் தரப்பட்டிருக்கிறது.

இம்மாவட்டத்தில் மொத்தம் 2 090 வாக்குப் பதிவுச் சாவடிகள் இருக்குமாம்.

திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, திருப்பத்தூர் ஆகிய நான்கு பார்லிமெண்டரி தொகுதிகளில் மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை முறையே 1 59,808;—7 98,817;—4 21 060;—2,84,020 என்று தெரியவருகிறது.

'பார்வர்ட் பிளாக்' கட்சி

தேர்தலில் போட்டியிட முடிவு

பம்பாய், சன. 25—

அகில இந்திய 'பார்வர்ட் பிளாக்' கட்சி 85 சட்டசபைத் தொகுதிகளுக்கும், 16 மக்கள் சபைத் தொகுதிகளுக்கும் போட்டியிட முடிவு செய்துள்ளதாம்.

சென்னை மாநிலத்தில் 20 சட்டசபைத் தொகுதிகளுக்கும் 4 மக்கள் சபை தொகுதிகளுக்கும் கட்சி போட்டியிடுமென்று முத்துராமலிங்கத் தேவர் அறிவித்துள்ளார்.

திட்டத்தைப்பற்றி தெரிவிக்க 'யோசனா'வாம்!

மக்களுக்கு அறிமுகப்படுத்த அரசாங்க இதழாம்!

புதுடில்லி, சன. 24—

ஐந்தாண்டுத் திட்டத்தின் வளர்ச்சியைப் பற்றி மக்கள் தெரிந்துகொள்வதற்கு 'யோசனா' என்ற வாரப் பத்திரிகையை பல்வேறு வட்டார மொழிகளில் வெளியிட அரசாங்கம் முனைந்திருக்கிறதாம்!

இப்போது இந்தியிலும் ஆங்கிலத்திலும் இந்த இதழ் வெளியாகிறது.

முதல் இதழின் முகவுரையில் பண்டித நேரு, ஐந்தாண்டுத் திட்டம் குறிப்பிட்ட சிலருக்கு மட்டுமல்ல என்றும், இந்திய மக்களின் ஒத்துழைப்புடன் உருவாக்கப்பட்ட மக்களின் திட்டம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

போர் மூளுவதை ரஷ்யா விரும்பவில்லையாம்!

புதுடில்லி, சன 24—

இரண்டாவது உலகப் போரில் ஈடுபட்டதின் காரணமாக ரஷ்யாவுக்கு ஏராளமான நஷ்டம் ஏற்பட்டிருப்பதால், எந்தப் புதிய உலகப் போர் மூளுவதையும் ரஷ்யா விரும்பவில்லை என்று ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சர் மார்ஷல் ஜுகாவ், விருந்தொன்றில் பேசுகையில குறிப்பிட்டிருக்கிறார்.

டெல்லிப் பெரியவர்களுக்குப் பேரிடி!

நம்பிய ரஷ்யா காலைவாரிவிட்டது!

'அரசியல் நிர்ணய சபையின் முடிவுகள் காஷ்மீரைக் கட்டுப்படுத்தாது'

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் தீர்மானம்

நியூயார்க், ஜன. 25—

'காஷ்மீரின் எதிர்காலத்தை, அங்கு ஐ. நா. மேற்பார்வையில் நடைபெறும் வாக்கெடுப்பின் மூலமே நிர்ணயிக்க வேண்டும் என்ற கொள்கையைப் பிரகடனம் செய்த—1948-ம் ஆண்டிற்கும் 1950-ம் ஆண்டிற்கும் இடையில் ஐ. நா. பாதுகாப்புச் சபையில் நிறைவேறிய ஆறு தீர்மானங்களை, தொடர்புடைய இரு தரப்பு சர்க்கார்களுக்கும் அதிகாரிகளுக்கும் நினைவுபடுத்துகிறோம்' என்று ஐ. நா. பாதுகாப்புச்சபை இன்று ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

மேலும், காஷ்மீரின் எதிர்காலம் பற்றி பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையே எழுந்துள்ள தகராறு குறித்து பாதுகாப்புச்சபை பரிசீலித்துக்கொண்டிருக்கும்போது இப்போதுள்ள நிலையே நீடிக்க வேண்டும் என்றும் தீர்மானம் கூறுகிறது.

காஷ்மீர் அரசியல் நிர்ணய சபை மேற்கொண்ட எந்த ஒரு நடவடிக்கையுமோ அல்லது அந்தச் சபையின் நடவடிக்கைக்கு ஒப்பவும் ஆதாரவாகவும் தொடர்புடைய தரப்பினர் மேற்கொண்ட நடவடிக்கையுமோ காஷ்மீரில் சுதந்திரமாகப் பாரபட்சமின்றி வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற கொள்கைக்கு இணக்கமானதாக இருக்க முடியாது என்றும் தீர்மானம் தெளிவுபடுத்தியுள்ளது.

ஐந்து நாடுகள்

ஆஸ்திரேலியா, கொலம்பியா, கியூபா, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய ஐந்து நாடுகள் இந்த தீர்மானத்தைக் கொண்டுவந்தன.

நோக்கம்

தீர்மானத்தின் நோக்கம் எல்லாம், காஷ்மீர அரசியல் நிர்ணய சபை மேற்கொள்ளும் எந்த முடிவும், அதன் அரசியல் அந்தஸ்தை மாற்றுவதற்கில்லை என்பதேயாகும்.

ஏன் வந்தது?

இந்தத் தீர்மானம் வந்ததற்குக் காரணம், 'இந்திய யூனியனோடு காஷ்மீரை இணையத்தனம (ஜன 26-ல்) இணைத்துக்கொள்ள காஷ்மீர அரசியல் சட்டத்தின்மூலம் நடவடிக்கைகளை இந்திய சர்க்கார் மேற்கொண்டிருக்கிறது,' என்று பாகிஸ்தான் குற்றம்சாட்டி ஐ. நா. பாதுகாப்புச் சபையில் புகார் செய்ததுதான்.

எதிர்ப்பின்றி......

ஐந்து நாடுகள் தீர்மானம், எவருடைய எதிர்ப்புமின்றி 10 நாடுகளின் ஆதரவோடு நிறைவேறியிருக்கிறது.

ரஷ்யா காலைவாரிவிட்டது

இந்தத் தீர்மானத்தின்போது ரஷ்யா சாதகமாகவோ பாதகமாகவோ வாக்களிக்காது நடுநிலை வகித்திருக்கிறது; சோவியத் சர்க்காரின் கண்ணோட்டத்திலிருந்து கூறவேண்டுமானால், காலை வாரிவிட்டிருக்கிறது.

எதிர்பார்த்தது என்ன?

இதுபோன்ற தீர்மானத்தை ரஷ்யா தனது ரத்து அதிகாரத்தைப் பிரயோகித்து, நிறைவேறவொட்டாமல் செய்துவிடும் என்று, டெல்லி அரசியல் வட்டாரங்கள் நம்பிக் கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

ஏனென்றால்......

ஏனெனில், ரஷ்யாத் தலைவர்களான புல்கானின் குருஷ்சேவ் ஆகியோர் 'ஆசிய விஜய'த்தின்போது காஷ்மீர் சென்றிருந்தகாலை, 'காஷ்மீர் இந்தியாவுடன் இரண்டறக் கலந்துவிட்டது,' என்று கூறியிருந்ததுதான் இந்தியாவின் நம்பிக்கைக்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது.

வியர்த்தம்

பாகிஸ்தான் சார்பில் வாதாடிய வெளிவிவகார மந்திரி பிரோஸ்கான் நூன் எழுப்பிய குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்து பண்டிதர் நேரு தூதுவர் வி. கே. கிருஷ்ணமேனன் பேசியதெல்லாம் வியர்த்தமாகிவிட்டிருக்கிறது.

தீர்மானத்தைக் கண்டித்தும், இந்தியப் பிரதிநிதி கிருஷ்ண மேனன் மிகுந்த ஆக்ரோஷத்துடன், கண்டித்துப் பேசினாராம்.

ஒரே விளைவு

இந்தத் தீர்மானத்தின் ஒரே விளைவு, பிரச்சினையை மீண்டும் இழுப்பதுதான் என்றும் அவர் கூறினாராம்.

பிழைகள் மலிந்ததாம்!

பிரோஸ்கான் நூன், மேனனுக்குப் பிறகு பேசும்போது, 'மேனனின் நீண்ட நேர விவாதம், பேச்சு அத்தனையும் பிழைகள் மலிந்தது—தவறான வழிக்கு இழுத்துச் செல்வது' என்று குறிப்பிட்டாராம்.

'மிக சஞ்சலப்படுகிறேன்'

காஷ்மீர் பற்றிய ஐ. நா. தீர்மானம் குறித்து பண்டித நேரு கவலை

புதுடில்லி, ஜன 25—

"இந்தியத் தரப்பின் கருத்தினை உண்மையில் அறிந்துகொள்வதற்கு முன்பாகவே, காஷ்மீர் பற்றி ஐ. நா. பாதுகாப்புச் சபை செய்துள்ள தீர்மானம், சாதாரணமான முறைகளுக்கும் மிக மாறுபட்டதாகும். இத் தீர்மானம் எனக்கு மிக மனவேதனையைத் தந்துள்ளது"

என்று, பண்டித நேரு, பாலம் விமான நிலையத்தில் பத்திரிகையாளரிடம் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர், 'காஷ்மீர் அரசியல் நிர்ணயசபை, தனது வேலைகளை முடித்துக்கொண்டுவிட்டு துவங்குமுன்னர் அது கலைந்துவிட இருக்கிறது; இனிமேல் அந்தச் சபையால் எதுவும் செய்வதற்கில்லை; எனவே, இருக்கிற நிலைமையிலும் மாற்றம் எதுவுமில்லை,' என்றும் குறிப்பிட்டுவிட்டு, 'இப்பிரச்சினையைப் பொறுத்து நான் தீவிரமாக ஆலோசித்த பின்னரே கருத்து தெரிவிக்கமுடியும்,' என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

காஷ்மீர் அரசியல் சட்டம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இன்று முதல் அந்தச்சபை, சட்டத்தின் 150-வது விதிப்படி, காஷ்மீரின் தற்காலிக சட்டசபையாக, புதியதொரு சட்டசபை தேர்ந்தெடுக்கப்படும்வரை இயங்கி வரும்.

வாக்கெடுப்பு நடத்த வேண்டுமெனக் கோரும் முன்னணியைச் சேர்ந்தவர்கள் சபையின் கடைசி கூட்டத்திற்கு வரவில்லை.

'காஷ்மீரின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் சர்வாதிகாரமும் இங்குள்ள மக்களின் பிரதிநிதிகளுக்கே உண்டு. அவர்கள் தங்களது உரிமைகளைப் பயன்படுத்தி இந்தப் புதிய அரசியல் சட்டத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்' என்று முதலமைச்சர் பக்ஷி குலாம், சபையின் இறுதிக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

கழகக் கூட்டங்கள்

★

சித்தத்தூர்பூர்பாளையம் :
பிள்ளையார் கோவில் அருகில்
28—1—57 மாலை 6½ மணிக்கு
தலைவர் : கே. எஸ். துரைசாமி
பேசுவோர் :
டி. கே. சீனிவாசன்
அ. பொன்னம்பலனார்

★

குத்தாலம் :
நகரப் பூங்காவில்
28—1—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : சி. கிருஷ்ணமூர்த்தி
பேசுவோர் :
கி. மனோகரன்
என். சிட்டப்பா

★★★★★★★★★★★★★★★★★

இரா. செழியன் M.A

(இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இளவல், 'மன்றம்' துணையாசிரியர்)

கரூர் பாராளுமன்ற தொகுதிக்கு நிற்கிறார்

★★★★★★★★★★★★★★★★★

நிலக்கோட்டை தொகுதி தி. மு. கழகத் தோழர்கட்கு

1-2-57 காலை 10 மணிக்கு அம்மையநாயக்கனூர் தி. மு. கழக கட்டிடத்தில், நிலக்கோட்டை தொகுதிக் குழு அமைப்புக்கூட்டம் நடைபெறும். தொகுதியைச் சேர்ந்த கிளைக் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாது வருகை தரக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

2,000 கள் இறக்கும் தொழிலாளர் அறப்போர்!

வாரங்கல் நகரில் 235 பேர் கைது

வேலையிலிருந்து நீக்கியதை எதிர்த்து நடவடிக்கை

வாரங்கல், ஜன 25—

வாரங்கல் நகரையும், அதனைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளையும் சேர்ந்த கள் இறக்கும் சுமார் 2,000 தொழிலாளர்கள், காண்டிராக்டர்களால் வேலையிலிருந்து நீக்கப்பட்டது குறித்து தங்கள் கண்டனத்தையும் எதிர்ப்பையும் தெரிவிக்கும் வகையில், அவர்கள் அனைவரும் கடந்த 4 நாட்களாக அறப்போர் நடத்திவருகின்றனர்.

அறப்போராட்டத்தின் 4-வது நாளான நேற்று, 5 பேர் கைது செய்யப்பட்டனர் என்றும், அவர்கள் உட்பட இந்த நான்கு நாட்களிலுமாக மொத்தம் கைது செய்யப்பட்டிருக்கிறவர்களின் எண்ணிக்கை 234 என்றும் தெரிகிறது.

இன்று இங்கு நடைபெற்ற கள் இறக்குவோர் சங்கத்தின் கூட்டம் ஒன்றில், ஐந்தைந்து பேரடங்கிய குழுவினராக தினந்தோறும் அறப்போரில் ஈடுபடுவதென்றும், ஒவ்வொரு குழுவினரும் ஊர்வலமாக வந்து, சட்டவிரோதமான நீதிகள் இரத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறதாகவும் செய்திக் குறிப்பொன்றின் மூலம் தெரியவருகிறது.

டில்லிக்கு டெலிவிஷன்

ரூ. 3 இலட்சம் செலவிடப்படுமாம்

புதுடில்லி, ஜன 24—

இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் டெலிவிஷனுக்காக ரூ. 40 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறதாம்.

கல்வி, கிராமங்களில் பொழுதுபோக்கு, மற்ற வசதிகளுக்காக டில்லியில் டெலிவிஷன் நிறுவப்படுமாம். இதற்கு ரூ. 3 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறதாம்.

பம்பாய் மாநிலத்தில் 1957—58-ல் டெலிவிஷன் திட்டம் அமுல் நடத்தப்படுமாம்.

தினம் 2,000 டன் இரும்புக்கனி

பெல்லாரியிலிருந்து வடநாட்டிற்கு ஏற்றுமதியாகிறதாம்

பெல்லாரி ஜன. 25—

இங்கிருந்து தினந்தோறும் குண்டக்கல் ஜங்ஷன் வழியாக 20,000 டன் இரும்புக்கனி (வடநாட்டிற்கு) ஏற்றுமதியாகிறதாம்.

இந்த இரும்புக் கனியை குண்டக்கலுக்கு எடுத்துச் செல்வதற்காக உபயோகப்படுத்தும் லாரிகள் வேலை நிறுத்தம் செய்திருப்பதால், ஏற்றுமதி பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

காரணம்

இரும்புக்கனிச் சுரங்கத்தவரிடமிருந்து லாரி சொந்தக்காரர்கள் அதிகமான வாடகை வேண்டுமெனக் கோருகின்றனர்; மேலும் மைசூர், ஆந்திர மாநிலங்கள் இரண்டிலும் போக்குவரத்து வரி வாங்கப்படுவதும் லாரி சொந்தக்காரர்களுக்குப் பெரும் சுமையாயிருப்பதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

சென்னை-36-வது வட்ட தி. மு. க. செயற்குழு உறுப்பினர்கட்கு:

27—1—57 காலை 10-மணிக்கு, தோழர் கே. எஸ். துரை இல்லத்தில் (எண் 17, மாம்பலம் பெருஞ்சாலை; கோடம்பாக்கம் இரயில் நிலையம் எதிரில்) கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். தேர்தல் நிதி அளிப்பது பற்றி ஆராயப்படும்.

அணுகுண்டு பரிசோதனை

அமெரிக்காவைப் போன்றே ரஷ்யாவும் நடத்துகிறது

புதியதொரு அணுகுண்டினை ரஷ்யா வெடித்து சோதனை நடத்தியிருப்பதாக அமெரிக்க அணு சக்திக் கமிஷன் தகவல் அளித்திருக்கிறது.

கடந்த வாரத்தில், இதுபோன்ற வேறு ஒரு பயங்கரமான விளைவு கொண்ட அணுகுண்டினை ரஷ்யா வெடித்துப் பரிசோதித்தின் தொடர்ச்சியாகவே இந்த சோதனையும் நடைபெற்றிருக்கிறதாம்.

கடந்த ஆகஸ்டு திங்களில், ரஷ்யா துவக்கிய அணுகுண்டு பரிசோதனைத் திட்டம், இப்போது இந்த இரு 'சோதனை'களின் மூலம் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறதாம்.

அமெரிக்க அணுசக்திக் கமிஷன் தந்துள்ள இத்தகவலை உறுதி செய்வதோ மறுப்பதோ ரஷ்யத் தரப்பிலிருந்து செய்தி எதையும் காணோம்.

மலையைக் கெல்லி எலியைப் பிடித்தனர்!

புதுடில்லி, ஜன 24—

தனது நியாயமான வருமானத்தைவிட அதிகமான அளவில் பொருள் வைத்திருந்தார் என்பதற்காக மத்திய பொது வேலை இலாகாவைச் சேர்ந்த ஒரு சர்க்கார் உயர்தர அதிகாரி வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறாராம்.

மத்திய உள்நாட்டு அமைச்சரவையைச் சேர்ந்த விசேடப் போலீசாரால் இக்குற்றம் கண்டு பிடிக்கப்பட்டதாம்.

மூன்று இலட்சம் டெலிபோன்களாம்

புதுடில்லி, ஜன. 26—

இந்தியக் குடியரசு தினமான இன்று, இந்தியாவில் உள்ள டெலிபோன்களின் எண்ணிக்கை 3 இலட்சமாகிறதாம்.

இந்தக் கடைசி டெலிபோனை, இந்தியாவின் இத்துறை முன்னேற்றத்தின் அடையாளத்திற்காக, குடியரசுத் தலைவர் இராசேந்திரர் அவர்கட்கு, மத்திய செய்திப் போக்குவரத்து அமைச்சர் இராஜ்பகதூர் அளிப்பாராம்.

தியாகிகளுக்கு அஞ்சலி

2-நிமிட நேரம் மௌனம் மேற்கொள்ளப்படும்

சென்னை, ஜன 24—

இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் உயிர் நீத்தவர்களின் நினைவாக இந்தியக் கடிகார நேரப்படி நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் ஜனவரி 30-ம் தேதி காலை 11 மணி முதல் 11-02 வரை இரண்டு நிமிட நேரம் மௌனம் மேற்கொள்ளப்படும்.

நேருவின் நண்பர் பண்டாரநாயகா

நேருவின் 'பாணி'யிலேயே ஏசுகிறார்

தமிழர்களின் உரிமைக் கிளர்ச்சி புத்திகெட்ட செயலாம்!

கொழும்பு, ஜன. 24—

இலங்கையில், கார்களுக்குப் பொறிக்கப்படும் எண் தலைமையில் ஆங்கில எழுத்துக்குப் பதிலாக 'ஸ்ரீ' என்ற சிங்கள எழுத்தைப் பொறிப்பதானது, சிங்களவரின் மொழி வெறியைப் பிரதிபலிப்பதாகும் என்பதை எடுத்துக்காட்டி அதனைக் கண்டித்து இலங்கையில் தமிழர்கள் நடத்தவிருக்கிற போராட்டங்களும் மேற்கொள்ள நடவடிக்கைகளும் 'புத்திகெட்ட செய்கைகள்' என்று இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா கூறியிருக்கிறாராம்.

'அனாவசியமாக இப்படிப்பட்ட விவேகமற்ற செயல்களில் மேற்கொள்ளும் தமிழ்த் தலைவர்கள் ஈடுபடமாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்,' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அமுதம் அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, நாராயண முதலித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.